செ.வெ.எண்:  20                                                                                     நாள்:  09.11.2021

பெரம்பலூர் மாவட்டம்

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் மருத்துவ காப்பீடு திட்ட அடையாள அட்டைகளை வழங்கினார்.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்ற பயனாளிகள், சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு நினைவு பரிசுகளையும், பொதுமக்களுக்கு மருத்துவ காப்பீடு திட்ட அடையாள அட்டைகளையும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (09.11.2021) வழங்கினார்.

**இது குறித்து மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்:**

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனை மற்றும் 06 தனியார் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் இதுவரை ரூ.90,88,47,772/- (தொண்ணூறு கோடியே எண்பத்து எட்டு லட்சத்து ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்து இரண்டு) மதிப்பீட்டில் 47,036 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தில் மொத்தம் 1450 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைகளும் 38 நோய் பரிசோதனைகளும் அதனோடு தொடர்புடைய 154 தொடர் சிகிச்சைகளும் 8 உயர் அறுவை சிகிச்சைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆண்டு வருமானம் ரூ.72,000- கீழ் உள்ளவர்கள் காப்பீட்டு திட்ட விண்ணப்ப படிவத்தில் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் கையொப்பம் பெற்றும், வருமான வரம்பு இல்லாத விதவைகள், முதியோர் உதவித்தொகை பெறுபவர்கள், முகாம் வாழ் இலங்கை தமிழர்கள், முகாம்களுக்கு வெளியே வசிக்கும் பதிவு செய்த இலங்கை தமிழர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் அதற்குண்டான அடையாள அட்டையை காண்பித்தும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட புகைப்படம் எடுக்கும் மையத்தில் காப்பீட்டு அட்டை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் பயனடைய ஏதேனும் சந்தேகம் இருந்தால் 1800 425 3993 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ணடு பயன்பெறலாம். இத்திட்டத்தில் தமிழகம் முழுவதும் 267 அரசு மருத்துவமனைகளும் 792 தனியார் மருத்துவமனைகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் அனைவரும் இது போன்று அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.செல்வராஜன், அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.அர்ஜுனன், உள்ளிட்ட மருத்துவ பணியாளர்கள் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.**